සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
**Sabaragamuwa Provincial Department of Education**

| | |
|---|---|
| පළමු වාර පරීක්ෂණය 2017 | 7 ශ්‍රේණිය |
| முதலாம் தவணைப் பரீட்சை 2017 | தரம் 7 |
| 1st Term Test 2017 | Grade 7 |

| | | |
|---|---|---|
| භූගෝල විද්‍යාව | I, II | පැය දෙකයි |
| புவியியல் | I, II | இரண்டு மணித்தியாலம் |
| Geography | I, II | Two hours |

பெயர்/சுட்டெண்:........................................................................................................................

## பகுதி - I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**
  - **இலக்கம் 01 முதல் 05 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

1) புவிச்சுற்றுகைக்கு எடுக்கும் காலம்
   I. 24 மணித்தியாலம் II. 365 நாட்கள் III. 365 மணித்தியாலம் IV. 24 நாட்கள்

2) புவிமேற்பரப்பில் தட்டையானது,
   I. முனைவுப்பகுதியாகும் II. மத்திய கோட்டுப்பகுதியாகும்
   III. அயனவலயப் பகுதியாகும் IV. எல்லாப் பகுதிகளுமாகும்

3) கிறீன்விச் கோட்டின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கோடுகள்,
   I. கிழக்கு நெடுங்கோடுகள் II. மேற்கு அகலக்கோடுகள்
   III. மேற்கு நெடுங்கோடுகள் IV. கிழக்கு அகலக்கோடுகள்

4) புவிமேற்பரப்பின் அதிகளவான பகுதிகள்,
   I. கண்டங்களாகும் II. சமுத்திரங்களாகும் III. மேட்டுநிலங்களாகும் IV. தீவுகளாகும்

5) இலங்கை அமைந்துள்ள வலயம்,
   I. ஆட்டிக் வலயம் II. குளிர் வலயம் III. இடைவெப்ப வலயம் IV. அயன வலயம்

- **வினா இலக்கம் 6 தொடக்கம் 10 வரையான கூற்றுக்களில் சரியாயின் (√) எனவும், பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

6) புவியின் மாதிரிக் கோளத்தில் வடக்கிலிருந்து தெற்காக வரையப்படுகின்ற கோடுகள் அகலக்கோடுகள் எனப்படும். ( )
7) கண்டங்களில் அரசியல் ரீதியாகப் பிரிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் நாடுகளாகும். ( )
8) இந்து சமுத்திரத்தில் யப்பான் தீவு அமைந்துள்ளது. ( )
9) அண்மித்த சுற்றுப்புறத்தை அடிப்படையாகக் கொண்டு சார்பு அமைவிடம் குறிப்பிடப்படுகின்றது. ( )
10) அந்தாட்டிக் கண்டம் குளிர்வலயத்தினுள் அமைந்துள்ளது. ( )

- **11 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக.**

11) உள்ளகச் சமவெளியில் அமைந்துள்ள அதிகமான…………………………. புனித தலங்களாகும்.
12) அரை குறை வரள் வலயக் காலநிலைக்கேற்ப வளர்ந்துள்ள புற்கள் ……………………. மாவட்டத்தில் காணக்கூடியதாக உள்ளது.
13) மத்திய மலைநாட்டிற்குரிய ……………….................................... இயற்கை அழகு நிறைந்ததாகும்.
14) வங்காள விரிகுடாப் பிரதேசத்தில் அதிகளவில் ……………………. ஏற்படும்.
15) உயரத்தில் கூடிய ஈரவலயக் காடுகள் ……………………… பிரதேசங்களில் அதிகளவில் காணப்படுகின்றன.


(எச்சக்குன்று, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, தாழமுக்கம், நக்கிள்ஸ் மலைத்தொடர்)

- **16 தொடக்கம் 20 வரையான வினாக்களில் பகுதி (அ) இற்குப் பொருத்தமான விடையை பகுதி(ஆ) இலிருந்து தெரிவு செய்து இணைக்குக.**

| பகுதி (அ) | பகுதி (ஆ) |
|---|---|
| 16) புவி மேற்கிலிருந்து கிழக்காகச் சுழல்வது | $0^o$ மத்தியகோடு |
| 17) மாதிரிப் பூகோளத்தில் மத்தியில் கிடையாக அமைந்துள்ள கோடு | கிறீன்விச் கோடு |
| 18) பருவமாற்றங்கள் ஏற்படுவது | புவிச் சுழற்சி |
| 19) மத்திய நெடுங்கோடு | $180^o$ கோடு |
| 20) மேற்கு மற்றும் கிழக்கு பக்கங்களுக்கு பொதுவான நெடுங்கோடு | புவிச்சுற்றுகை |

## பகுதி - II

- **முதலாம் வினா கட்டாயமானது. ஏனைய வினாக்களில் நான்கினைத் தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**



1. பொருத்தமான நிறத்தைப் பயன்படுத்தி தரப்பட்டுள்ள இடங்களை மேலேயுள்ள உலகப்புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.


I. அவுஸ்திரேலியாக் கண்டம் II. ஆட்டிக் சமுத்திரம்

III. ஐக்கிய அமெரிக்கா IV. மடகஸ்கர் தீவு

v. பாக்கு நீரிணை vi. மத்தியதரைக் கடல்

(6x2 = 12 புள்ளிகள்)

2. (i) ங்கு தரப்பட்டுள்ள மாதிரிப் பூகோளத்தை அவதானித்து A, B, C ஆகிய எழுத்துக்களால் காட்டப்படும் கோடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக




A – ............................................

B –..............................................

C – ....................................................

( 3 புள்ளிகள்)

(ii) இம்மாதிரிப் பூகோளத்தில் $0^{O}$ அகலக்கோட்டிற்கு வடக்கிலும், தெற்கிலும் அமையப்பெற்றுள்ள பகுதிகளைத் தனித்தனியாகப் பெயரிடுக..

$0^{O}$ இற்குவடக்கே அமைந்த பகுதி – ........................................................................

$0^{O}$ இற்கு தெற்கே அமைந்த பகுதி – ........................................................................

(4 புள்ளிகள்)

(iii) கோடுகள் A, C ஆகியவற்றிற்கு இடைப்பிட்ட பிரதேசம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது? அப்பிரதேசத்தில் காணப்படக்கூடிய விசேட பண்புகள் இரண்டு எழுதுக. ( 5 புள்ளிகள்)

3. (i) புவியில் பரப்பளவில் கூடிய கண்டங்கள் மூன்றைக் குறிப்பிடுக ( 3 புள்ளிகள்)

(ii) உலகின் மிகப்பெரிய கண்டத்தில் அமைந்துள்ள 04 நாடுகளைக் குறிப்பிடுக.

( 4 புள்ளிகள்)

(iii) புவிமேற்பரப்பில் கண்டமானது எத்தனை சதவீதம் என்பதனைக் குறிப்பிட்டு, கண்டம் என்பதற்கு சுருக்கமான விளக்கம் தருக. ( 5 புள்ளிகள்)

4. (i) புவியிலுள்ள பிரதான சமுத்திரங்கள் எத்தனை? இரண்டை எழுதுக. ( 3 புள்ளிகள்)

(ii) இலங்கை அமைந்துள்ள சமுத்திரத்தில் அமையப்பெற்றுள்ள கடல்கள் இரண்டைக் குறிப்பிடுக. ( 4 புள்ளிகள்)

(iii) சமுத்திரம் கடல் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.?

( 5 புள்ளிகள்)


5. (ஆபிரிக்கா கண்டம், அந்தாட்டிக்கா கண்டம், சீனா, ஆசியாக் கண்டம், இந்தியா, அவுஸ்ரேலியா கண்டம்)

(i) மேலே அடைப்புக்குறிக்குள் தரப்பட்டவற்றில் இருந்து இலங்கைக்கு,
வடக்கில் அமைந்துள்ள கண்டம் -
வடக்கில் அமைந்துள்ள நாடு –
மேற்கில் அமைந்துள்ள கண்டம் - என்பவற்றை எழுதுக. ( 3 புள்ளிகள்)

(ii) இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள தீவுகள் நான்கைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) ஒரு நாடு தீவாக அமைந்திருப்பதனால் கிடைக்கும் நன்மை ஒன்றையும், தீமை ஒன்றையும் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

6. கீழேயுள்ள படத்தை அவதானித்து விடையளிக்குக.




(i) A, B, C ஆகிய எழுத்துக்கள் மூலம் காட்டப்படும் இடங்களைக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)

(ii) A-B வரையும், மற்றும் C-D வரையும் உள்ள தூரத்தைக் கிலோமீற்றரில் தருக. (4 புள்ளிகள்)

(iii) இலங்கையின் ஆட்புலக் கடல் எல்லைப் பிரதேசத்தின் மூலம் கிடைக்கும் பயன்கள் இரண்டை சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளிகள்)

7. (மலைத்தொடர், தீவு, பள்ளத்தாக்கு, எச்சக்குன்று, களப்பு, கணவாய், குடா)

(i) கரையோரச் சூழலில் காணக்கூடிய நிலத்தோற்ற அம்சங்கள் மூன்றை எழுதுக. ( 3 புள்ளிகள்)

(ii) இலங்கையின் பிரதான தரைத்தோற்ற வலயங்கள் எத்தனை? அவை எவை (4 புள்ளிகள்)

(iii) இலங்கை ஒரு தீவாக இருப்பினும், இயற்கை அழகு வாய்ந்த நாடாக விளங்குகின்றமைக்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)